**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**

**அசல் வழக்கு எண். 188/2019**

நாள்: 24.06.2026.

பெயர்: காசிநாதன் (வா.சா.1) த/பெ: அருணாச்சலம்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி...</u>

1) வா.சா.ஆ.1 எனது தந்தை அருணாச்சலம் அவரது சகோதரர்கள் மற்றும் பங்காளியிடமிருந்து பெற்ற கிரையம் ஆவணம் என்றால் சரிதான், அதில் கலியபெருமாள் பங்காளி ஆவார். அந்த கிரைய சொத்தான சர்வே எண்.93/7 என்பது சர்வே எண்கள்.93/7A, 93/7B என உட்பிரிவு ஆகிவிட்டது என்றால் சரிதான். சர்வே எண்.93/7A ன் விஸ்தீரணம் 4 செண்ட், சர்வே எண்.93/7B ன் விஸ்தீரணம் 3 3/4 (3.75) செண்ட் ஆகும். சர்வே எண்.93/7B ல் 143 சதுரமீட்டர் என்று எனது வழக்குரையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். சர்வே எண்.93/7B யை பொறுத்து ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அதற்கு பட்டா இல்லை, ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். சர்வே எண்.93/7B சொத்தைப் பொறுத்து பிரதிவாதி எந்த பிரச்சினையும் செய்யவில்லை என்றாலும், அதனையும் சேர்த்து பிரதிவாதிக்கு எதிராக அவசியமில்லாமல் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

2) வா.சா.ஆ–2 பரிவர்த்தனையில் 1வது பார்ட்டியான எனது மற்றும் எனது சகோதரர் ராமசுந்தரம் ஆகியோருக்கு சம்பந்தப்பட்ட சொத்து சர்வே எண்.95/5 ல் 9 செண்ட், சர்வே எண்கள்.95/6F, 95/6A ஆகியன பொது பாதை என்றாலும், சர்வே எண்.95/6F 8 செண்ட், 95/6A 4 செண்ட் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ல் 2 வது பார்ட்டிகளான சிவசாமி, சாமிதுரை ஆகியோருக்கு சம்பந்தப்பட்ட சொத்து சர்வே எண்.93/7 ல் 8 செண்டில் 4 செண்ட், சர்வே எண்.93/5 ல் 16 செண்டில் 2 செண்ட் என்றால் சரிதான். மேலும் சர்வே எண்.79 ல் திட்டம் 3 ஏக்கர் 76 செண்டில் கூறப்பட்டுள்ள சொத்தின் நான்கெல்லையில் 1வது பார்ட்டி பாகத்திற்கு மேற்கு தெற்கு, வீதிக்கு வடக்கு என்பது மட்டும் தான் சரி என்றாலும்,

ராஜமாணிக்கம் பாகத்திற்கு கிழக்கு என கூறப்பட்டுள்ளது தவறு என்றாலும், சாமிதுரை, சிவசாமி நிலத்திற்கு கிழக்கு என்பது தான் சரி என்றாலும் சரியல்ல.

3) தவசி படையாட்சியின் மகன்கள் அழகுமுத்து, ராமசாமி என்றால் சரியல்ல, அழகுமுத்துவின் மகன்கள் சின்னதம்பி, முத்துசாமி என்றால் சரிதான். சின்னதம்பிக்கு சாமிதுரை, சிவசாமி ஆகியோர் மகன்கள் என்றால் சரிதான். முத்துசாமிக்கு குணசேகரன் என்ற ஒரே மகன் என்றால் சரிதான், குணசேகரன் மகன் பிரதிவாதி வெங்கடேசன் என்றால் சரிதான். ராமசாமிக்கு பிச்சமுத்து, மருதமுத்து, துரைசாமி ஆகியோர் மகன்கள் என்றால் சரிதான். அருணாச்சலம், பெருமாள் ஆகியோர் பிச்சமுத்துவிற்கு முதல் மனைவி வழியாக மகன்கள் என்றால் சரிதான், 2 வது மனைவி வழியாக கோவிந்தசாமி, சின்னதம்பி ஆகியோர் மகன்கள் என்றால் சரிதான். அருணாச்சலத்திற்கு காசிநாதன் எனும் நான், எனது தம்பி ராமசுந்தரம் ஆகியோர் மகன்கள் என்றால் சரிதான். எனக்கு ஒரே மகன் மட்டும் தான் அவர் பெயர் சண்முகசுந்தரம் என்றால் சரிதான். ராமசுந்தரத்திற்கு சரவணன் என்ற ஒரே மகன் என்றால் சரிதான். சின்னதம்பிக்கு 5 மகன்கள் என்றால் சரிதான். கோவிந்தசாமிக்கு 4 மகன்கள். மருதமுத்துவிற்கு கலியபெருமாள் என்ற ஒரே மகன்தான் என்றால் சரிதான். துரைசாமிக்கு ஆண் வாரிசு இல்லை, அவருக்கு ஒரு மகள் மட்டும் தான்.

4) வா.சா.ஆ.2 பரிவர்த்தனையில் நானும், எனது தம்பியும் மட்டும் தான் எழுதிக்கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். அந்த பரிவர்த்தனை சொத்துக்களில் அருணாச்சலத்தின் சகோதரர்களுக்கும் பாத்தியம் உண்டு என்றால் சரியல்ல, அவர்கள் அதில் ஒரு போதும் உரிமை கொண்டாடவில்லை. சின்னதம்பி மகனான சாமிதுரை மற்றும் சிவசாமியின் வாரிசுகள் ஆகியோரிடமிருந்து மட்டும் தான் பரிவர்த்தனை எழுதிப் பெற்றுக்கொண்டோம் என்றால் சரிதான். முத்துசாமியின் வாரிசுகளையும் சேர்த்து எழுதப்படாததால் வா.சா.ஆ.2 பரிவர்த்தனை பத்திரம் செல்லாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 பரிவர்த்தனையில் 2 வது பார்ட்டிக்கு கொடுக்கப்பட்டதாக கூறும் சொத்துக்களை இன்று வரை அவர்களை அனுபவம் செய்ய நாங்கள் விடவில்லை என்றால் சரியல்ல. சர்வே எண்.95/6A சொத்தைப் பொறுத்து 3 ம் நபருக்கு நான் ஒரு கிரையம் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

சர்வே எண்.95/6F ற்கு எங்கள் வகையறா பெயரிலேயே பட்டா மாற்றிக்கொண்டு வா.சா.ஆ.2ல் 2வது பார்ட்டியான சாமிதுரை, சிவசாமியை அந்த பாதையை அனுபவம் செய்ய விடவில்லை என்றால் சரியல்ல. சர்வே எண்.95/6Fற்கு 2வது பார்ட்டிகள் பெயரில் பட்டா மாற நான் விடவில்லை என்றால் சரியல்ல. சர்வே எண்.93/7ல் 4 செண்டும், சர்வே எண்.93/5ல் 2 செண்டும் எழுதிக்கொடுத்தற்கு பதிலாக குணசேகரனின் மகனிடம் சர்வே எண்.79ல் உள்ள மீதி 7.5 செண்டை கொடுத்துவிட்டோம் என்றால் சரியல்ல.

5) சர்வே எண்.79 என்பது தான் சர்வே எண்கள் 343/3, 343/4 என்று மாறியுள்ளது என்றால் சரிதான், அவை பூர்வீகமாக அழகுமுத்து குடும்பத்திற்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல, அந்த பூர்வீக சொத்துக்களை தான் குணசேகரன் மகன் வெங்கடேசனுக்கு விட்டுக்கொடுக்கப்பட்டு அது அவரது அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. நான் பிரதிவாதியின் இடத்தில் சென்று தகராறு செய்து வேலி வைக்க முற்பட்ட போது அவர் தடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. அது சம்பந்தமாக நான் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த புகாருக்கு கொடுக்கப்பட்ட மனு ரசீது தான் வா.சா.ஆ.8 என்றால் சரிதான். காவல் நிலைய விசாரணையில் நீதிமன்றத்தில் உள்ள நிலுவை வழக்கை முறைப்படி தீர்த்துக்கொள்கிறோம் என்று பேசி முடித்தோம் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் கொடுத்த புகாரை நான் திரும்ப பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான்.

6) வா.சா.ஆ.7 நான் அரசு அதிகாரியை வசப்படுத்தி பெற்றேன் என்றால் சரியல்ல. சர்வே எண்கள். 343/3, 343/4 ஆகிய சொத்துக்களில் பிரதிவாதியின் உரிமையை ஒப்புக்கொண்டு அதில் கீழ்புறம் 400 சதுரடி கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. சர்வே எண்கள். 343/3, 343/4 ல் 400 சதுரடி போக மீதமுள்ள இடத்தை பிரதிவாதி அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 பாகப்பத்திரத்தை சர்வே எண்.343/3, 343/4 ஆகியவற்றை சேர்த்து எழுதியுள்ளது செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4, 5, 6 ஆகியன இவ்வழக்கிற்கு சம்மந்தப்பட்ட ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.9 ற்கும் தாவா

சொத்துக்களுக்கு எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.10 ல் எனது தந்தை கிரையம் பெற்ற அதே சொத்தை தான் நான் வா.சா.ஆ.2 பரிவர்த்தனை மூலமாக மீண்டும் பெற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல. சர்வே எண்கள்.343/3, 343/4 ஆகியவற்றிற்கு 19.09.2024 ம் தேதியில் அரசு அதிகாரிகளை வசம்படுத்தி வா.சா.ஆ.11 பட்டா பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.11 04.10.2024 ல் அச்சிடப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.12 ற்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எனது வழக்குரையில் வீட்டுவரி ரசீது பற்றி கூறியுள்ளேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. சர்வே எண்கள்.343/3, 343/4 ஆகிய சொத்துக்கள் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்பதால் அவற்றை பொறுத்து இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. பிரதிவாதியை அலைகழிக்க வேண்டியே இவ்வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

ஒப்பம்/அ.காசிநாதன்/

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்லி, என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சிடப்பட்டு, சாட்சிக்கு படித்து காட்டி, அவரால் சரி என ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்.

ஒப்பம்/ம.சி. கண்ணதாசன்/
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.